1982 மார்ச் 25]

சொன்னார்கள். அது குறித்து மத்திய அரசுக்கும் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு பணம் இதற்கென கொடுக்கிறார்கள்? மானியமாக கொடுக்கிறார்களா? கடனாக கொடுக்கிறார்களா என்பதை அறிவிப்பதோடு மாநில சர்க்காரும் இதிலே ஏதாவது சேர்த்து செலுத்தும் வகையில் முடிவு எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: வாணியம்பாடி டேனர்ஸ்அசோசியேஷன்—தோல் வியாபாரத்தில் ஈடுபடக் கூடியவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திலிருந்து நமக்கு தாக்கீது அனுப்பி, அந்த ரிப்போர்ட்டின்படி, அந்த பிராஜக்டுக்கு ரிக்கரிங் & நான் ரெக்கரிங் எக்ஸ்பென்டிசர் அதாவது மூலக் கேள்வியிலே எழுப்பப்பட்டிருக்கிற பாரத் லெதர் கார்ப்பரேஷன் பிராஜக்ட்—அந்தப் ப்ராஜக்கட்டுக்காக ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சருக்காக 3.60 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும், நான்-ரெக்கரிங் எக்பென்டிசர் 81·2 லட்சம் செலவு ஆகும் என்றும் இருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை செலவு ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் பாரத் லெதர் கார்ப்பரேஷன் தமிழக சர்க்கார், அதிலே பங்கு கொள்வதாக இருந்தால், கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அந்தக் சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். சுமூகமான முடிவு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காசநோய் பரவாமல் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 657—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காசநோய் அதிக அளவில் பரவாமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: சென்னையிலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் காசநோய் தடுப்பு இயக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளிலும் காசநோயைக் கண்டு அறியவும் சிகிச்சை மூலம் குணப்படுத்தவும் இலவச வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு அருகாமையிலுள்ள மருத்துவ மனையிலேயே இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அதில் எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பி.சி.ஜி. வேக்சினேஷன்—தடுப்பு ஊசியை அவர்களுக்குப் போடுகிறார்களா? எத்தனை பேர்களுக்குப் போடுகிறார்கள்? தமிழக அரசு மருத்துவமனைகளில் காசநோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை போதுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கேள்விகளை ஒன்றாகச் இணைத்துக் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3 அல்ல, 4 கேள்விகளைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார். சுருக்கமாகவே பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே' தமிழகத்தில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்ற அரசு மருத்துவ மனைகளில் 3,651 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் இந்தப் படுக்கைகளின் எண்ணிக்கை அகில இந்திய ரீதியாக போதாது என்ற கருத்து இருக்கிறது. இன்றைய தினம்கூட பத்திரிக்கையிலே மத்திய அமைச்சகத்தில் இருக்கக் கூடிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம். அடுத்தபடியாக எத்தனை நோயாளிகள் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் கிட்டத்தட்ட 10 லட்சம் பேர்கள், சரியாக சொல்லவேண்டுமானால் 9.9 லட்சம் பேர்கள் காசநோயாளிகளாக இருக்கிறார்கள். பி.சி.ஜி தடுப்பு ஊசி எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். தமிழகத்தில் 1,68 லட்சம் பேருக்கு பி.சி.ஜி. வேக்சினேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுக்கு இன்னொரு முறை கேள்வி கேட்க அனுமதி கிடையாது. மூலக்கேள்வி கேட்ட உறுப்பினர்களுக்கு 2 துணைக் கேள்விகள் கேட்க அனுமதி. நீங்கள் 4 கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறீர்கள்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காசநோயானது ஆரம்பத்திலே குழந்தைகளுக்குத்தான் அதிகமாக வருகிறது. ஆகவேதான் அதைத் தடுக்கின்ற வகையில் ஏதாவது கிராஷ் புரோக்கிராம் எடுக்க அரசு முடிவு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

1982 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு பிரைமரி காம்பௌக்ஸ் என்று காசநோய் வருவதற்கு ஒரு ஸ்டேஜ் முன்னதாக வரக்கூடிய நோயானது அதிக அளவில், பரவலாக வருகிறது.

ஆகவேதான் நாம் மான்டோட்டெஸ்ட் செய்து விட்டு பலருக்கு பி. சி. ஜி. வேக்சினேஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப் கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு வியாதி வராமல் தடுக்க நல்ல வாய்ப்பாக இருக்கின்றது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில ராஜாஜி சேனடோரியம் அழியும் தருவாயில் இருக்கின்றது. அதைப் புதுப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே அந்த மருத்துவமனையினை நான் கூட சென்று பார்த்திருக்கிறேன். அது இன்னும் கூட விஸ்தரிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோய்க் கிருமியினைக் கட்டுப்படுத்திய டாக்டர் ராபர்ட் கோச் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இந்த ஆண்டு முழுவதும் காச நோய் ஆண்டாகக் கருதப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, டாக்டர் ராபர்ட் கோச் அவர்கள் பிறந்து 100 ஆண்டுகள ஆகின்றன. எனவே அவருடைய நூற்றாண்டு விழாவினை அகில இந்திய ரீதியிலே கூட கொண்டாட இருக்கிறோம். ஆகவே இந்த வாய்ப்பினை நாம் அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழகத்தில் காச நோய்க்கு இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள நிச்சயமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். காச நோய்க் கழகம் அதிலே மிகத் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னால் நகர சபை ஒவ்வொரு குடிசைப் பகுதிகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் சென்று நடமாடும் காச நோய்ப் பிரிவின் மூலம் அந்த நோய் இருக்கின்றதா என்று கண்டுபிடித்து அதன்படி எக்ஸ்ரே படம் எல்லாம் எடுத்தார்கள். அந்த மெஷீன் கூட

நகரசபையிலே இன்னும் இருக்கின்றது. எனவே இந்த நூற்றாண்டு விழாவினை ஒட்டி மீண்டும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி யார் யாருக்கு காச நோய் இருக்கின்றது என்று எக்ஸ்ரே படம் மூலம் கண்டுபிடிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, திரு. பாலன் அவர்களுடைய யோசனை மிக நல்ல யோசனைதான். தீவிரமாக அதற்காக ஸ்கிரீனிங் அந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் வந்திருந்தார்கள்—இன்டென்சிவ் ஸ்கிரீனிங், மாஸ் ஸ்கிரீனிங் என்ற வகையிலே மக்கள்நல்வாழ்வுத் துறை இலாக்காவும், மாநகராட்சியும் இணைந்து பணிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடவாசல் அரசு மருத்துவமனை.

* வினா எண். 658 திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனையை வட்ட தலைமை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பிலுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இருக்க வேண்டிய வசதிகள் குறித்து வரையறைகள் ஏதும் இல்லை. தேவைக்கேற்றவாறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஒரு துணை வட்டமாக இருந்த குடவாசல், 1981-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் வட்டமாக உயர்த்தப்பட்டதால் அங்கு செயல்படும் அரசினர் மருத்துவமனை ஒரு வட்ட தலைமையிட மருத்துவமனையாக அழைக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குடவாசல் 1981 ஆம் ஆண்டு முதல் தனி வட்டமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற மருத்துவமனை கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றது. அங்கே உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூட வசதிகள் இல்லை. மேலும் குடவாசலிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் எந்த விதமான வசதியான மருத்துவமனையும் கிடையாது. ஆகவே அதனை